செய்தி வெளியீடு எண்:019 நாள் :11.01.2016

# கலை பண்பாட்டுத் துறை

## மாநில அளவிலான ஓவிய, சிற்ப கலைக்காட்சி நடத்துதல்

கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியின் மூலம் மாநில அளவிலான ஓவிய, சிற்ப கலைக்காட்சி நடத்தப்படவுள்ளது. இக்கலைக் காட்சியில் தெரிவு செய்யப்படும் சிறந்த ஓவியங்கள் மற்றும் சிற்பப்படைப்புகளின் அடிப்படையில் 30 வயதிற்கு மேற்பட்ட 10 மூத்தக் கலைஞர்களுக்கும், 30 வயதிற்குட்பட்ட 10 இளங்கலைஞர்களுக்கும் என ஆக மொத்தம் 20 கலைஞர்கள் விருதிற்கு தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் மூத்தக் கலைஞர்களுக்கு ரூ.20,000/–க்கான காசோலையும், தெரிவு செய்யப்படும் இளங்கலைஞர்களுக்கு ரூ.10,000/–க்கான காசோலையும் வழங்கப்படும். தமிழகம் முழுவதுமுள்ள ஓவிய, சிற்ப கலைஞர்களிடமிருந்து ஓவியங்கள் மற்றும் சிற்பங்களின் புகைப்படங்கள் பின்வரும் விதிமுறைகளின்படி வரவேற்கப்படுகின்றன.

1. ஓவிய, சிற்ப கலைக்காட்சியில் கலந்துகொள்ள விரும்பும் கலைஞர்கள் தங்களின் ஒளிப்படத்துடன்(Passport size) கூடிய தன்விவரக்குறிப்புடன் (பெயர், பிறந்த தேதி, கலைப்பிரிவுகளில் பெற்றுள்ள கல்வித் தகுதிகள், படைப்பின் தலைப்பு, படைப்பின் பெயர், தொலைபேசி எண் ஆகிய விவரங்களுடன்), ஓவியங்கள் / சிற்பங்களின் (10’’x12’’ size) இரண்டு ஒளிப்படங்களை(Photos) அனுப்பி வைத்திடுதல் வேண்டும்.

2. ஓவியர்கள் மற்றும் சிற்பிகளிடமிருந்து பெறப்படும் ஒளிப்படங்களில் இருந்து, தெரிவுக்குழுவின் மூலம் ஒளிப்படங்கள் காட்சிக்காக தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு மட்டும் உரிய விவரங்கள் இவ்வலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டு, அதன் பின்னர் ஒவியப் படைப்புகளும், சிற்பங்களும் பெறப்பட்டு அக்கலைப் படைப்புகளிலிருந்து விருதுக்கான கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவர்.

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் உரிய தன்விவரக்குறிப்புடன் ஓவியங்கள் / சிற்பங்களின் ஒளிப்படங்களை பின்வரும் முகவரிக்கு 22.01.2016–க்குள் அனுப்பி வைத்திட கலைஞர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

முதல்வர்(பொ),
அரசு கவின் கலைக் கல்லூரி
ஈ.வெ.ரா. பெரியார் சாலை.
பெரியமேடு, சென்னை– 600 003
தொலைபேசி எண். 044–25610878

ஆணையர்(பொ)

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**